# சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
# மாணவர்களுக்கான கையேடு
# கல்வியாண்டு 2016/2017




சட்டக் கற்கைத் திணைக்களம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்**
**கல்வியாண்டு 2016/2017**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு நாம் உங்களை வரவேற்கிறோம்.

சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் உள்வாங்கலுக்கு நீங்கள் விண்ணப்பிப்பதற்கான தீர்மானத்தை மேற்கொண்டதற்காக நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். உங்கள் கல்வியியல் பெருமுயற்சிக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளையில், நாம் எமது கடமையின் ஒரு பகுதியாக உங்களுடைய பல்கலைக்கழகக் காலத்தின் போது தங்களுடைய கல்வியியல் இலக்குகளை அடைவதற்காக உறுதுணை வழங்குவோம்.

இக்கைந்நூல் தங்களுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பற்றியும், சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் பற்றியும் அடிப்படை தகவல்களை வழங்குகிறது. இக்கைந்நூல் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி I ஆனது, திறந்த பல்கலைக்கழகம் தொடர்பான பொதுவான தகவல்களையும், அதன் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைமை, பிராந்திய நிலையங்களின் வலைத் தொடர்பு போன்ற தகவல்களை வழங்குகிறது. பகுதி II ஆனது சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதன் கல்வியியல் செயற்பாடுகள் பற்றிய குறிப்பான தகவல்களை கூறுகிறது.

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய செம்மையான தகவலை வழங்குவதற்கு நாம் எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்ற அதேவேளை, இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் 2016/2017 கல்வியாண்டில் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாத்திரம் பொருத்தமானது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். திறந்த பல்கலைக்கழகத்தின் கொள்கை அல்லது ஒழுங்கு விதிகளில் பிற்காலத்தில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்களினூடாக இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் பொருத்தமற்றதாக வரும். அத்தகைய சூழ்நிலைகளில் நாம் புதிய மாற்றங்கள் தொடர்பாக உங்களுக்கு அறியத் தருவோம்.

நான் எனது கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுடன் இணைந்து தங்களுடைய சகல கல்விசார் முயற்சிகளிலும் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

ரோகண ரட்னாயக,
தலைவர்,
சட்டக் கற்கைத் திணைக்களம்

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## சட்டமாணிப் பட்டம்
## 2016/2017
## முதலாம் பகுதி - பொதுத் தகவல்கள்

### 1. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் (OUSL) இலங்கையில் சிறப்பாகத் தாபிக்கப்பட்ட, தொலைக்கல்வி மூலம் கல்வியை வழங்கும், கல்வித்துறையில் சுயாதீனமான தேசியப் பல்கலைக்கழகம் ஒன்றாகும். 18 வயதிற்கு மேற்பட்ட எந்த ஒரு நபரும், முதற்பட்டம், பட்டப் பின்னிலைப் பட்டம், திப்புளோமா அல்லது சான்றிதழ் (கணிப்புச் சான்றிதழ் உட்பட) அல்லது ஏனைய சான்றிதழ்களைப் பெறக்கூடியதான பயிற்சி நெறிகளை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பயிலக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகம் தாம் கவர்ந்து கொண்ட மாணவர்களின் நோக்கில் ஒரு வீட்டுக் கற்கைப் பல்கலைக்கழகமாகவும், பிற்பட்டகால கல்விவாய்ப்பினை வழங்கும் ஒரு பல்கலைக்கழகமாகவும் விளங்குகின்றது. கல்வி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தொடர்வதற்கான வாய்ப்பினை இழந்தவர்களுக்கு தமது வாழ்வின் பிற்பட்ட காலப்பகுதி ஒன்றில் அத்தகைய தவறவிடப்பட்ட வாய்ப்பை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, தாபிக்கப்பட்டது. திறந்த பல்கலைக்கழகமானது, இலங்கையில் உள்ள ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களைப் போன்று அதே சட்ட மற்றும் கல்வி அந்தஸ்து ஆகியவற்றை கொண்டுள்ளது. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நிர்வாக ஆட்சி அதிகார சபையான அதனுடைய சொந்த பேரவையையும் உயர் கல்வியியல்

தீர்மானங்களை மேற்கொள்ளும் செனட் சபையையும் கொண்டுள்ளது. உபவேந்தர் பல்கலைக்கழகத்தின் பிரதான நிர்வக அலுவலர் ஆவார். பல்கலைக்கழகமானது கல்விசார் மற்றும் கல்வி சாரா முழுநேர ஊழியர்களைக் கொண்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகம் மத்திய வளாகத்தையும், பிராந்திய வலையமைப்பையும் கொண்டுள்ளது.

பல்கலைக்கழகம் ஐந்து பீடங்களைக் கொண்டது. அவை மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், கல்விப் பீடம், பொறியியல் தொழினுட்ப பீடம் இயற்கை விஞ்ஞான பீடம் மற்றும் சுகாதார விஞ்ஞான பீடம். இப்பீடங்கள் வேறுபட்ட சான்றிதழ் தரம் தொடக்கம் பட்டமேற்படிப்பு, கலாநிதி வரை பல்வேறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றன. பீடாதிபதியே பீடத்தின் பிரதான கல்வியியல் மற்றும் நிர்வாகத்துறை தலைவர் ஆவார். ஒவ்வொரு திணைக்களத்திலும் நிர்வாகத்துறை மற்றும் கல்வியியல் நடவடிக்கைககளிற்கு பொறுப்பாக தலைவர் ஒருவர் காணப்படுகிறார். சட்டமாணி கற்கை பட்டப்படிப்பானது மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான துறையால் மேற்கொள்ளப்படுகிறது. சட்டக் கற்கைகள் திணைக்களமானது சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தையும் சட்ட முதுமாணி பட்டப்படிப்பையும் நடாத்துகின்றது.

## 2. பயிற்சி நெறிகள் மற்றும் கற்கை நிகழ்ச்சித்திட்டம்

திறந்த பல்கலைக்கழகம் பாரம்பரிய பல்கலைக் கழகத்தினின்று வேறுபட்டு நிற்பதால் பல்கலைக்கழக நாளாந்த நடவடிக்கைகளில் குறிப்பாகப் பயன்படுத்தப்படும் சில சொற் பிரயோகங்களிற்கு பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டப்படுகின்றீர்கள்.

உதாரணமாக திறந்த பல்கலைக்கழகச் சொல்லாட்சியில், ஒரு பயிற்சி நெறி என்பது கற்கையின் அடிப்படை அலகு ஒன்றினைக் குறிக்கும். சாதாரணமாக, இது ஒரு கல்வியாண்டிற்குள் பூர்த்தி செய்யப்படும். ஒரு கற்கை நிகழ்ச்சித் திட்டம் பல பயிற்சி நெறிகளை உள்ளடக்கிய ஒன்றாக இருக்கும். உதாரணமாக 16 பயிற்சி நெறிகளை உள்ளடக்கிய சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் நான்கு வருடகால கற்கையினூடு பூர்த்தி செய்யப்படும்.

குறிப்பிட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம் மூலம் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதனூடாக சான்றிதழ், திப்புளோமா அல்லது முதல் பட்டம் அல்லது பட்ட பின்னிலை படிப்பு போன்ற தகைமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இத்தகைகைமைகளை கீழே தரப்பட்டுள்ள கற்கை நிகழ்ச்சித் திட்டங்களினூடாகப் பெறலாம்.

(1) அத்திவாரப் பயிற்சி நெறிகள்
(2) சான்றிதழ் பயிற்சி நெறிகள்
(3) திப்புளோமா பயிற்சி நெறிகள்
(4) பட்டமாணிப் பயிற்சி நெறிகள்
(5) பட்டப் பின் பயிற்சி நெறிகள்
(6) தொடரும் கல்விப் பயிற்சி நெறிகள்

அத்திவாரப் பயிற்சி நெறிகள் ஏனைய கல்வியியற் பயிற்சி நெறிகளுக்கு நுழைவாயிலாக அமையும். இது, அடிப்படைக் கல்வித்துறைகளில் முதல் தரம், இரண்டாம் தரம் என இரு மட்டங்களில் வழங்கப்படும். ஒரு மாணவன் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து, க.பொ. உயர்தர பரீட்சையில் சித்தியடைய தவறியிருப்பின், திறந்த பல்கலைக்கழகத்தில் குறித்த ஒரு கற்கைத்துறையின் அத்திவாரப் பயிற்சி நெறிகளைப் திருப்தியாகப் பூர்த்தி செய்வதன் மூலம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலுள்ள ஏதேனும் கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுமதி பெறத் தேவையான மட்டத்தை அடையக் கூடியதாக இருக்கும்.

க.பொ.த சாதாரண தரத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னரே விதிமுறையான கல்வி முறையை விட்டு விலகி இருக்கும் ஒரு மாணவன் மற்றும் உயர் கல்வியை தொடரும் வாய்ப்பை கைவிட்டுள்ள அனைவரும் அத்திவாரப் பயிற்சியிலிருந்து[1] **சட்டம் போன்ற கற்கை நெறிகளுக்கான கல்வி நடவடிக்கைகளைத் தொடரலாம். எவ்வாறாயினும் அத்திவார பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் ஒரு மாணவன் அனுமதி பரீட்கைக்குத் தோற்றி சட்டமாணிப் பட்டப்படிப்புக்கு தன்னை உள்வாங்கிக் கொள்ள சட்டமாணி அனுமதிப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.**

[1] சட்டக் கற்கைகள் திணைக்களம் அடிப்படை பயிற்சி நெறிகளை நடத்தவில்லை. ஆயினும், சமூக கற்கைள் திணைக்களம் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

## 3. கற்றல் முறை

**அச்சிடப்பட்ட சாதனங்கள்** - இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கைக்கொள்ளப்படும் திறந்த தொலைக்கல்வி முறையின் கீழ் (ODL) அச்சிடப்பட்ட பாடநூல்களைப் பெறுதல் முக்கியமான ஒரு அம்சமாகும். குறிப்பிட்ட பயிற்சி நெறி ஒன்றிற்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு பதிவின் போது மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின் போது அச்சிடப்பட்ட சாதனங்கள் வழங்கப்படும். மாணவாகள் அவற்றை கற்பதுடன் பிராந்திய மற்றும் கல்வி நிலையங்களில் நடாத்தப்படும் நாட்பாடசாலைகளில் பங்குபெற வேண்டும். நாட் பாடசாலைகளில் பங்குபற்றுதலானது கட்டாயப்படுத்தப்படாத போதும் மாணவர்கள் பாடங்களைப் பற்றிய சிறந்த விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும் தமது நாட்பாடசாலை கல்வியியலாளர்களுடன் கலந்துரையாடவும் இது உதவுகிறது.

**கட்புல - செவிப்புலச் சாதனங்கள்** - இச்சாதனங்கள் திறந்த தொலைக்கல்வி முறைமையின் கீழ் நாட்பாடசாலைகளுக்கு குறைநிரப்பியாகப் பயன்படுத்தப் படுகிறது. இக்கட்புல செவிப்புல சாதனங்கள் வீடியோ, ஓடியோ நாடாக்கள் மற்றும் பவர்பொயின்ற் சமர்ப்பனங்களையும் உள்ளடக்கும்.

**நாட் பாடசாலைகள்**[2] நாட்பாடசாலைகள் பிராந்திய நிலையங்கள் மற்றும் கற்கை நிலையங்களில் ஆசிரியர்களுடன் வரையறுக்கப்பட்ட நேருக்கு நேரான அமர்வுகளை அளிக்கின்றது. பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்படுகின்ற வருகைதரு விரிவுரையாளாகள் நேருக்கு நேர் அமர்வுகள் அல்லது நாட்பாடசாலைகளை நடாத்துவர். மாணவர்கள் அச்சிடப்பட்ட சாதனங்களை நாட்பாடசாலைகளுக்கு முன்பே வாசித்து நாட் பாடசாலைகளில் வருகைதரு விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடப்படுமாறு எதிர்பார்க்கப்படுகிறீர். சட்டமாணி

[2] நாட்பாடசாலை என்பது நேருக்கு நேரா பகுப்புகளை குறிக்கும்.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு பாட நெறிக்கு 20 மணித்தியாலங்கள் பிரகாரம் சகல பாடங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக பிராந்திய நிலையங்களில் நாட் பாடசாலைகளுக்கு குறை நிரப்பியாக சிறப்பு கருத்தரங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒன் லைன் பாட நெறிகள் (Online Courses)** - பல்கலைக்கழகத்தின் சில பீடங்களால் அங்குள்ள வசதிகள் மற்றும் நிபுணர்களது நிலவுகையை பொறுத்து ஒன் லைன் வகுப்புகள் வழங்கப் படுகின்றன. குறித்த பாடநெறிக்கு தன்னை பதிவு செய்து கொள்ளும் மாணவன் ஒருவன் அப்பீடத்தில் ஒன்லைன் கற்கை வழங்கப் படுமாயின் அதற்கு தன்னை பதிவு செய்து கொள்ள முடியும்.

சட்டக் கற்கைகள் திணைக்களம் நிகழ் காலத்தில் 16 ஒன்லைன் பாட நெறிகளை வழங்குகிறது. சட்டக் கற்கைகள் திணைக்களத்தின் ஒன்லைன் பாடநெறிகளானவை குறித்த பாடநெறி தொடர்பான சகல வழக்குத் தீர்ப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், நியதிச் சட்டங்கள் மற்றும் கடந்த கால வினாத்தாள்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வசதியை பெற மாணவர்கள் NODES இணையத்தளத்தை அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.[3]

---

[3] வசதி - நீர் http://ousl.nodes.lk இணையத்தளத்தில் NODES-OUSL பக்கத்தினைப் பார்க்க.

## 4. ஒப்படைகளும் பரீட்சைகளும்

இப்பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனின் கல்வி செயல் நிறைவேற்றம் பயிற்சிநெறிக் காலத்தில் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படும். மாணவர்கள், ஒரு கல்வியாண்டு முடிவடைவதற்குள் குறிப்பிட்ட தொகை ஒப்படைகளைச் சமர்ப்பிக்கவும், பல பரீட்சைகளில் தோற்றவும் வேண்டப்படுகிறனர். இவை, திருத்துனர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு, அவர்களின் குறிப்புகளுடன் மீண்டும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. மாணவர்களுடைய செயல் நிறைவேற்றம் தொடர்பான மதிப்பீட்டு முறைமை "தொடர் மதிப்பீடு" என அழைக்கப் படுகிறது. இதன் வடிவம், கட்டமைப்பு, மற்றும் இவற்றின் எண்ணிக்கை என்பன சட்டப் பிரிவினால் தீர்மானிக்கப்படும். இத்தொடர் மதிப்பீட்டுக் கூறானது, ஒரு பயிற்சி நெறியில் இருந்து மற்றொரு பயிற்சி நெறிக்கும், ஒரு வருடத்தில்" இருந்து மற்றொரு வருடத்திற்கும் வேறுபட்டுக் காணப்படும். உதாரணமாக இவை, திறந்த புத்தக பரீட்சையாகவோ (OBT), மூடிய புத்தக பரீட்சையாகவோ (NBT), வீட்டுக்கு எடுத்துச் செல்லும் ஒப்படையாகவோ, வாய்மொழி மூல பரீட்சையாகவோ அல்லது திட்ட அறிக்கை போன்ற பல்வேறுபட்ட வடிவங்களில் அமைந்திருக்கும்.

மாணவர்கள் தமக்குக் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களை வாசித்தறிய வேண்டும் என்பதுடன், தொடர்ச்சியான கற்றல் மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடு என்பவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவும் வேண்டும். திணைக்களம் குறிப்பிட்ட கல்வியாண்டிற்கான வருட இறுதிப் பரீட்சைக்கு மாத்திரம் மாணவர்கள் தோற்றுவதை ஊக்கப் படுத்தாது. மாணவர் ஒருவர் வருட முழுதும் இடம்பெறும் தொடர் மதிப்பீட்டு பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகள் இறுதிப் பரீட்சைக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு பயிற்சி நெறியின் முடிவிலும் இறுதிப் பரீட்சை நடாத்தப்படும். ஒப்படைகளுக்கும் பரீட்சைகளுக்கும் பெற்ற மொத்தப் பெறுபேற்றின் அடிப்படையில் இறுதித் தரம் நிர்ணயிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்டவைக்கு அமைவாக குறித்த பயிற்சி நெறியின் முழு மதிப்பிட்டில் முப்பது வீத (30%) புள்ளிகளை தொடர் மதிப்பீட்டு பரீட்சையில் இருந்தும் (CA), எஞ்சிய 70% புள்ளிகள் பாட நெறியின் இறுதிப் பரீட்சையில் இருந்துபெற்றுக் கொள்ளப் படலாம். திறந்த தொலைக்கல்வி முறையில் தொடர் மதிப்பீட்டு பரீட்சைகள் எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தன என்பதையும், தொடர் மதீப்பீட்டு பரீட்சையில் புள்ளிகள் பெறுதல் பாட நெறியின் வெற்றிகரமான பூர்த்திக்கு முக்கியமானது என்பதையும் வலியுறுத்துகிறது.

## 5. பிராந்திய நிலையங்களும் கற்கை நிலையங்களும்

இன்று இலங்கை திறந்த பல்கலைக்கழகம் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், பதுளை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் தன் பிராந்திய நிலையங்களைக் கொண்டுள்ளது. இவ்வனைத்து பிராந்திய நிலையங்களிலும் சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் நடாத்தப்படுகிறது. இவற்றில் ஏதேனும் பிராந்திய நிலையத்தில் பட்டப்படிப்புதரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் திட்டத்தை தொடர்வதற்கு நாள் பாடசாலைகள், தொடர் மதிப்பீட்டு பரீட்சைகள், இறுதிப் பரீட்சைகள் என்பவற்றுக்கு தாம் தெரிவு செய்த பிராந்திய நிலையங்களில் அமருமாறு வேண்டப்படுகின்றனர்.

திறந்த பல்கலைக்கழகத்தால் மாணவர்களிற்கு வசதிகளை வழங்குவதற்காக, நாடாளாவிய ரீதியில் கற்கை நிலைய வலையமைப்புகள் விருத்தி செய்யப்படுகின்றன. நிகழ்காலத்தில் 19 கற்கை நிலையங்கள் நாடு முழுதும் தாபிக்கப்பட்டுள்ளன.

## 6. நூலக வசதிகள்

உசாத்துணை வசதிகள் திறந்த பல்கலைக்கழகத்தின் மத்திய நிலையத்தின் பிரதான நூலகம் மற்றும் சட்டப் பட்டப்படிப்புத் திட்டம் வழங்கப்படும் ஏனைய நிலையங்களிலும் அளிக்கப்படுகின்றன. இந்நூலகங் களிலுள்ள அலுவலர்கள் உங்களிற்கு தேவையான நூல்கள் தொடர்பான தகவல்களை தந்து உதவுவார். சட்டமாணி பபட்டப்படிப்பு நிகழ்ச்சியின் முக்கிய விடயமாக மாணவர்கள் வழக்குத் தீர்ப்புகள, நியதிச்சட்டங்கள் மற்றும் சட்ட நூல்கள் என்பவற்றை வாசிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

## 7. கட்டணங்களும் ஏனைய செலவுகளும்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் கட்டணம் அறவிடும் தொலைக்கல்வி நிறுவனமாகும். பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் தமது கட்டணங்களை செலுத்துமாறு வேண்டப் படுகின்றனர். அச்சிடப்பட்ட சாதனங்கள் மற்றும் கட்புல செவிப்புல சாதனங்களை உள்ளடக்கிய பயிற்சி நெறிகளை தயார் படுத்துவதற்கும் நாட் பாடசாலைகளது வருகைதரு விரிவுரையாளர்களுக்கு கட்டணங்களை செலுத்துவதற்கும் பல்கலைக்கழகத்தினால் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தைப் பயில்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பதாரர் பொருத்தமான கட்டணத்தை செலுத்துவதற்குரிய பற்றுச்சீட்டு ஒன்றைப் பெறுவர். நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்துக் கொள்ள முன்பு இக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும். கட்டணம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் பதிவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓவ்வொரு கல்வியாண்டுக்குமான போதனைக் கட்டணம் இரண்டு தவணைகளில் செலுத்தப்படலாம். இவற்றுள் முதற் தவணைக் கட்டணம் பதிவிற்கு முன் செலுத்தப்பட வேண்டும்.

இக்கட்டணம் கற்கைநெறிக்கான முழுப் பெறுமதியில் 1/3 ஆக அமைவதுடன், எஞ்சிய 2/3 ஆனது இலங்கை அரசினால் அளிக்கப்படுகிறது.

## பகுதி II - சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்

### 8. அறிமுகம்

திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டப் பிரிவானது, அது 1984 ஆண்டு முதல் சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தை வழங்கி வருகின்றது. இலங்கையில் திறந்த தொலைக்கல்வி முறையில் (ODL) சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தினை நடாத்தி வருகின்ற ஒரே ஒரு பல்கலைக்கழகம் இதுவாகும்.

இப்பயிற்சி நெறித் திட்டத்தினை வடிவமைப்பதில் ஒன்றிணைக்கப்பட்ட திணைக்களத்தின் இலக்குகளும் நோக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

திறந்த தொலைக்கல்வி முறையின் சில அடிப்படைத் தத்துவங்களுக்கு இசைவாக இருக்கும் வகையில், மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டும், கல்வியியல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் முக்கிய பயிற்சி நெறிகளானவை கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்காக தர்க்க ரீதியான சிந்தனை, பகுப்பாய்வு மற்றும் அறிவுபூர்வ திறன்களாக உய்த்தறிதல், ஆராய்ந்தறிதல் போன்றவற்றை விருத்தி செய்ய தற்போதைய சமூகத்தில் சட்டத்தின் சாராம்சத்தையும், சட்டம் செயற்படும் சமுதாயச் சூழ்நிலைகளையும் அறிந்து கொள்வதற்காக சிக்கலான நிகழ்வுகளை செயற்கையாகப் பகுப்பாய்வு செய்து, சட்டத்தத்துவங்களை அந்நிகழ்வுக்குப் பிரயோகிக்கும் திறனை விருத்தி செய்யவும் மாணவர்கள் வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ சுருக்கமாகவும் பயனுள்ள விதத்திலும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள சட்ட ஆராய்ச்சிக்குத் தேவையான திறன்களைப் பயிற்றுவிக்கவும், மற்றும் பல்சார் விடயங்கள் தொடர்பான அணுகுமுறையை அறிந்து கொள்வதிலுள்ள திறன்களை விருத்தி செய்யவும்

## 9. அனுமதித் தேவைகள்

9.1 திறந்த பல்கலைக்கழகத்தால் சட்டமாணிப் பட்டம் வழங்கப்படுவதற்கு இட்டுச் செல்லும் பயிற்சி நெறிகளுக்காக 2016/2017 இல் மாணவராகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் விண்ணப்பதாரர் ஒருவர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கையளிக்கும் தினத்தில், கீழே தரப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனும் ஒரு கல்வியியல் / தொழில் தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) திறந்த பல்கலைக்கழகத்தின் அடிப்படைப் பயிற்சி நெறிகளில் மட்டம் 1 மற்றும் 2 ஐப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது

(ஆ) க.பொ.த (உ.த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டத்தின் கீழ்) **நான்கு பாடங்களில்** ஆகக் குறைந்தது ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும். அத்துடன், ஏனைய பாடத்தில் இன்னுமொரு தடவையில் சித்தி அடைந்திருந்தல் வேண்டும் அல்லது

(இ) க.பொ.த (உ.த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டத்தின் கீழ் உள்ள மூன்று பாடங்களில்) ஒரே தடவையில் மூன்று சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது

(ஈ) திறந்த பல்கலைக்கழகத்தின் செனட் சபையினால் ஏற்கப்படக்கூடியதான இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

9.2 மேலே கூறப்பட்டுள்ள கல்வித் தகைமைகளையுடைய மாணவர்கள் சடட்மாணி பட்டப்படிப்புத் திட்டத்திற்கு உட்பிரவேசிப்பதற்கு (சட்டத்தரணிகள் தவிர) ஒரு சட்ட

அனுமதித் தேர்வில் தோற்றி, பல்கலைக்கழகத்தினால் பிரகடனப்படுத்தக்கூடிய ஏற்கப்படக்கூடியதான வெட்டுப் புள்ளியை அடைந்திருக்கும் பட்சத்தில், சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தில் அனுமதி பெறுவர்.

9.3 சட்டத்தரணிகளாக, சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள விண்ணப்பதாரிகள் அனுமதிப் பரீட்சையில் இருந்தும் பயிற்சி நெறியின் மட்டம் மூன்றில் இருந்தும் விலக்களிக்கப்படுவார்கள். அத்துடன், இவர்கள் மட்டம் நான்கிற்கான பாடங்களை நேரடியாகப் பதிவு செய்யலாம். எனினும் இந்தப் பாடத்திட்டத்தின் ஏனைய எல்லாச் சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் உட்படுவர்.

9.4 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்தான சட்டத்தில் பட்டம் ஒன்றையுடைய ஒருவர், சட்ட அனுமதித் தேர்வில் இருந்து விலக்களிக்கப்படுவதோடு மட்டம் மூன்றுக்கும் நேரடியாகப் பதிவு செய்யலாம். மேலும், அவர்கள் பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்பட்ட படி, குறிப்பிட்ட பயிற்சி நெறிகளில் இருந்தும் விலக்களிக்கப்படுவார். இவ்வாறான விதிவிலக்குகள் அப்படிப்புத் திட்டத்திற்குத் தேவையான திறன் மதிப்பீட்டின் அரைப்பங்கிற்கு மேல் அதிகரிக்க முடியாததாகும்.

9.5 நிகழ்ச்சித்திட்டத்தை தொடர பதிவு செய்யும் விண்ணப்பதாரிகள் அவர்கள் தெரிவு செய்த பிராந்திய நிலையத்தில் பரீட்சைகளிற்கு சமூகமளிக்க வேண்டும்.

9.6 மாணவர்களது தெரிவுக்கான அனுமதி பரீட்சையானது 05 திகதி மார்ச் 2017 அன்று நடாத்தப்பட தற்காலிகமாக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

9.7 இவ்வருடமும் கடந்த காலத்தைப் போல சட்டமாணி பட்டப்படிப்புத் திட்ட அனுமதி பரீட்சை நான்கு வேறுபட்ட வினாத்தாளகளைக் கொண்டிருக்கும். முழு பரீட்சைக்கும் ஒதுக்கப் பட்டுள்ள காலம் 3 மணித்தியாலயம் ஆகும். எவ்வாறாயினும் பரீட்சையின் கட்டமைப்பில் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு மாற்றம் உள்ளது.

| பரீட்சை கட்டமைப்பு | | | | |
|---|---|---|---|---|
| | வினாத்தாளின் பெயர் | ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் | செலவிட எதிர்பார்க்கப் பட்டுள்ள காலம் | அளிக்கப் பட்டுள்ள மதிப்பு (சித்தியடைய பெற வேண்டிய குறைந்தபட்ச புள்ளி) |
| வினாத்தாள் I | பொது நுண்ணறிவு | 100 | 60 நிமிடங்கள் | குறைந்தபட்ச புள்ளி இல்லை |
| வினாத்தாள் II | பொது அறிவு | 100 | 40 நிமிடங்கள் | குறைந்தபட்ச புள்ளி இல்லை |
| வினாத்தாள் III | சிங்கள / தமிழ் மொழி | 50 | 40 நிமிடங்கள் | 40% (உதாரணமாக 20 புள்ளிகள்) |
| வினாத்தாள் IV | ஆங்கில மொழி | 50 | 40 நிமிடங்கள் | 30% (உதாரணமாக 15 புள்ளிகள்) |

பரீட்சார்த்தி, பொது நுண்ணறிவு மற்றும் பொது அறிவு வினாத்தாள்களில் அதிக புள்ளிகளைப் பெறுவதை விட , சிங்கள / தமிழ் மொழி வினாத்தாளில் 20 புள்ளிகள் மற்றும் ஆங்கில மொழி வினாத்தாளில் 15 புள்ளிகள என்பவற்றையும் குறைந்த பட்ச புள்ளிகளாக பெற்றிருக்க வேண்டும் என மேலுள்ள அட்டவணைக் காட்டுகிறது. அதாவது பரீட்சார்த்தி, வினாத்தாள் I- பொது நுண்ணறிவு மற்றும் வினாத்தாள் II- பொது அறிவு ஆகிய பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்றாலும் அவன்/அவள், வினாத்தாள்

III மற்றும் வினாத்தாள் IV என்பவற்றில் மேற்குறிப்பிட்ட குறைந்த பட்ச புள்ளிகளைப் பெறாத பெறாத போது அவன்/அவள் சட்டமாணி பட்டப்படிப்புத் திட்ட அனுமதி பரீட்சையில் சித்தியடைய தகுதியடைய மாட்டார்.

## 10. பிராந்திய நிலையங்களில் ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகள்

10.1 2016/2017 இல் பிராந்திய நிலையங்களில் ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பிராந்திய நிலையங்களிலும் கற்கை நடவடிக்கைகள் தொடரப்படவுள்ள மொழி விபரம்

| நிலையம் | ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகள் | மொழி | | |
|---|---|---|---|---|
| | | சிங்களம் | ஆங்கிலம் | தமிழ் |
| கொழும்பு | 210 | √ | √ | √ |
| கண்டி | 110 | √ | √ | √ |
| மாத்தறை | 110 | √ | - | - |
| அனுராதபுரம் | 60 | √ | - | - |
| யாழ்ப்பாணம் | 60 | - | - | √ |
| மட்டக்களப்பு | 60 | - | - | √ |
| குருநாகல் | 60 | √ | - | - |
| பதுளை | 60 | √ | - | √ |

10.2 ஒவ்வொரு பிராந்திய நிலையங்கட்கும் ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளானது, குறித்த பிராந்திய நிலையத்தில் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர தெரிவு செய்துள்ள விண்ணப்பதாரி அனுமதி பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் இறங்கு வரிசை ஒழுங்கிலேயே நிரப்பப்படும். எவ்வித சந்தர்ப்பங்களின் கீழும் விண்ணப்பதாரியால் தெரிவு செய்யப்பட்ட பிராந்திய நிலையத்தை தவிர்ந்த பிற பிராந்திய நிலையங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

நீர் உமது நிரந்தர வதிவிடத்துக்கு அண்மையில் உள்ள பிராந்திய நிலையத்தினையும், செய்ய விரும்பும் மொழிமூலத்தினையும் தெரிவுசெய்தல் வேண்டும்.

10.3 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் எப்பிராந்திய கற்கை நிலையத்தில் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர விரும்புகின்றனர் என கட்டாயமாக குறிப்பிடல் வேண்டும்.

எவ்வித சந்தர்ப்பங்களின் கீழும் ஒரு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி தான் தெரிவு செய்த பிராந்திய நிலையத்தை நிகழ்ச்சியின் போதோ, முன்னரோ மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

## 11. கற்றல் மற்றும் கற்பித்தல் ஊடக மொழி பற்றிய அறிவுறுத்தல்கள்

மட்டம் 3 மற்றும் மட்டம் 4 என்பவற்றுக்கான அச்சிடப்பட்ட பாடநூல்கள் மும்மொழிகளிலும் கிடைக்கப் பெறும். மட்டம் 5 மற்றும் மட்டம் 6 என்பவற்றுக்கான பாடநூல்கள் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கக்கூடியதாக உள்ளதால் ஆங்கலத்தில் பயிற்சி நெறிப் பாடங்களை வாசித்தலும் விதந்துரைக்கப்பட்ட ஆங்கில வெளியீடுகளை வாசித்து விளங்குதலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய இன்றியமையாததாகும். எனவே ஆங்கிலத்தில் நல்ல புலமை பெறுதல் பயனுள்ளதாக இருக்கும்.

## 12. பயிற்சி நெறியின் ஆரம்பம்

சட்டமாணிப் பட்டத்திற்கு இட்டுச் செல்லும் பயிற்சி நெறிகள் 2016/2017 கல்வியாண்டு 2017 ஆகஸ்ட் இல் ஆரம்பமாகும்.

## 13. கட்டணங்கள்

மாணவர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களது விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | - | 400.00 |
| வசதிக் கட்டணம் | - | 1500.00 |
| நூலகக் கட்டணம் | - | 100.00 |
| திறன் மதிப்பீடு வீதம் போதனைக் கட்டணம் | - | 950.00[4] |
| சட்டக் கற்கைக்கான ஆங்கிலம் (திறன் மதிப்பீடு வீதம்) | - | 4000.00[5] |

பரீட்சார்த்தி ஒருவரால் செலுத்தப்பட வேண்டிய போதனைக் கட்டணமானது அவர் குறித்த அக்கல்வியாண்டில பதிவு செய்ய விரும்பும் திறன் மதிப்பீட்டின் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும்.

மாணவர்கள் செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம் பின்வருமாறு:

உள்நாட்டு மாணவர்களின் போதனைக் கட்டணத்தின் நான்கு மடங்கு வெளிநாட்டு மாணவர்களிடம் இருந்து அறவிடப்படும்.

---

[4] மொத்தமாக ஒரு கல்வியாண்டுக்கு 36 திறன் மதிப்பீடுகள் உண்டு.

[5] மேலதிகத் தகவல்களுக்கு 14வது பந்தியைப் பார்க்க.

## 14. கல்வி சார் நோக்கங்களுக்கான ஆங்கிலச் சான்றிதழ் (சட்டக் கற்கைகள்)

14.1 திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் திணைக்களம் சட்டமாணி மாணவர்களுக்காக ஆங்கில மொழி விசேட நெறிகளைக் கொண்டு நடத்துகின்றது. இந்நெறிகள், சட்ட மாணவர்களுக்கு அவசியமான கல்விசார் மற்றும் தொழில்சார் ஆங்கிலத் திறனை விருத்தி செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

14.2 சட்டமாணிப் படிப்புத் திட்டத்தைத் தொடரத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சகலரினதும் ஆங்கில அறிவு தரப்படுத்தும்/விலக்களிக்கும் பரீட்சை ஒன்றின் மூலம் பரீட்சிக்கப்படும். இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், அவர்கள் ஒன்றில் விலக்களிக்கப் படுவார்கள் அல்லது தகுந்த மட்டத்திற்கான ஆங்கில மொழிக்கான நெறியைத் தொடரத் தேவைப்படுத் தப்படுவர். இந்த ஆங்கில நெறியில் சித்தியடைதல் சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டத்திற்குக் கட்டாயத் தேவைப்பாடாகும் என்பதை மாணவர்கள் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் அந்த நெறியை வெற்றிகரமாக முடிக்காத வரையில் பட்டங்கள் வழங்கப்படமாட்டாது.

| |
|---|
| சட்டமாணி பட்டத்தை வழங்குவதற்கு ஆங்கில மொழி நிகழ்ச்சித் திட்டத்தை (விலக்களிக்கப்பட்டவர்கள் தவிர) பூர்த்தி செய்தலானது ஒரு கட்டாயமான நிபந்தனையாகும். |

## 15. பயிற்சி நெறித் திட்டத்தின் கால அளவு

சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் ஒவ்வொரு மட்டத்திலும் 12 மாதங்களைக் கொண்ட கல்வியாண்டைக் கொண்டிருக்கும். ஒரு கல்வியாண்டில் இரண்டு பூரண திறன் மதிப்பீட்டுப் பயிற்சி நெறிகளைப் பயிலும் மாணவர் ஒருவர் சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டத்திற்கு நான்கு வருடங்களை செலவிட வேண்டியிருக்கும். மாணவர் ஒருவர்

தமது முதல் முயற்சியிலேயே இவ்வாறான திறன் மதிப்பீடுகளைப் பெற்றிருந்தாலன்றி, மேற்கூறிய காலப்பகுதிக்குள் இப்பயிற்சி நெறித் திட்டத்தைப் பூரணப்படுத்த முடியாததாகும்.

மாணவர்கள் தமது சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டத்தினை ஆகக்கூடியது தமது ஆரம்ப பதிவிலிருந்து 12 கல்வியாண்டிற்குள் முழுமைப்படுத்த வேண்டும். (மாணவர்கள் தமது மட்டம் 3 ஆகக்கூடியது 4 கல்வியாண்டிற்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்)

## 16. சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டத்திற்கான பயிற்சி நெறிகள்

### 16.1 மட்டம் - 3

பின்வரும் பாடங்கள் மட்டம் III இல் கற்பிக்கப் படுகின்றன.

| பயிற்சிநெறிக் குறியீடு | பயிற்சி நெறித் தலைப்புகள் |
|---|---|
| LWU 1411 | இலங்கையின் சட்டங்களுக்கான ஓர் அறிமுகம் |
| LWU 1412 | சட்ட முறைமை |
| LWU 1201 | அரசியலமைப்புச் சட்டம் 1 |
| LWU 1202 | ஒப்புரவுக் கோட்பாடுகள்[6] |

### 16.2 மட்டம் - 4

| பயிற்சிநெறிக் குறியீடு | பயிற்சி நெறித் தலைப்புகள |
|---|---|
| LWU 2311 | ஒப்பந்தச் சட்டம் |
| LWU 2312 | குற்றவியல் சட்டம் |
| LWU 2313 | குடும்பச் சட்டம் |

[6] மேலதிகத் தகவல்களுக்கு ஐந்தாது பந்தியைப் பார்க்க.

சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் மட்டம் மூன்றில் இருந்து சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் மட்டம் நான்கிற்கு தரமுயர்த்தப்படுவதற்கு மாணவன் ஒருவன் LWU 1411, LWU 1412 மற்றும் LWU 1201 என்பவற்றை முதல் பதிவில் இருந்து குறைந்த பட்சம் நான்கு வருட காலத்துக்குள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.[7]

**16.3 மட்டம் - 5**

சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் மட்டம் நான்கில் இருந்து சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டத்தின் மட்டம் ஐந்துக்கு தரமுயர்த்தப்படுவதற்கு ஒரு மாணவன்: பதிவின் போது மட்டம் மூன்றில் உள்ள பாடநெறிகளில் விலக்களிப்புப் பெற்ற சட்டத்தரணிகள் தவிர

(அ) மட்டம் மூன்றில் உள்ள எல்லா நெறிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன்,

| **பயிற்சிநெறிக் குறியீடு** | **பயிற்சி நெறித் தலைப்புகள்** |
|---|---|
| LWU 3311 | நிருவாகச் சட்டம் |
| LWU 3312 | காணிச் சட்டம் |
| LWU 3313 | தீங்கியல் சட்டம் |
| LWU 3314 | சுற்றாடல் சட்டம் |

---

[7] மாணவர் ஒருவர் மட்டம் 3 இலிருந்து மட்டம் 4 இற்கு LWU 1202 – ஒப்புரவுக் கோட்பாடுகள் பாடத்தினை நிறைவு செய்யாது தொடர முடியும். ஆயினும் மட்டம் 4 இல் திறன் மதிப்பீட்டை மீறாமல் பாடநெறியில் உள்ள 3 பாடங்களை மட்டுமே தெரிவு செய்ய முடியும். எவ்வாறாயினும் அவர் மட்டம் 5 இனைத் தொடர LWU 1202 ஒப்புரவுக் கொள்கைகளை நிறைவு செய்தல் வேண்டும்

**16.4 மட்டம் - 6**

சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் மட்டம் III, IV மற்றும் V என்பவற்றில் இருந்து சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் மட்டம் ஆறிற்கு தரமுயர்த்தப்படுவதற்கு ஒரு மாணவன், சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் மட்டம் ஐந்திற்குரிய எல்லாப் பயிற்சி நெறிகளிலும் ஆகக் குறைந்த தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்[8]

| **பயிற்சிநெறிக் குறியீடு** | **பயிற்சி நெறித் தலைப்புகள்** |
|---|---|
| LWU 4321 | சட்டவியல்[9] |
| LWU 4322 | சர்வதேசச் சட்டம் |
| LWU 4323 | தொழிற் சட்டம் |
| LWU 4324 | வர்த்தகச் சட்டம் |
| LWU 4325 | மனித உரிமைகள் சட்டம் |

LWU 4321 மற்றும் LWU 4326 ஆகியன கட்டாயப் பாடநெறிகளாகும். ஏனைய மூன்று பாடநெறிகளில் ஏதேனும் இரண்டு பாடநெறிகளை மாணவர்கள் தெரிவு செய்தல் வேண்டும்.

---

[8] தகைமை – ஒவ்வொரு பாடத்திற்குமுரிய தொடர் மதிப்பீடு பரீட்சைகளில் இருந்து குறைந்தபட்ச புள்ளிகளை பெற வேண்டும். ஒரு பாடத்தில் குறைந்தபட்ச புள்ளிகளை பெறத் தவறும் சந்தர்ப்பத்தில் அப்பாடத்திற்குரிய இறுதிப் பரீட்சையில் தோற்றுவதற்கு மாணவர் அனுமதிக்கப்பட மாட்டார்.

[9] LWU 4321 மற்றும் LWU 4326 ஆகியன கட்டாயப் பாடநெறிகளாகும். ஏனைய மூன்று பாடநெறிகளில் ஏதேனும் இரண்டு பாடநெறிகளை மாணவர்கள் தெரிவு செய்தல் வேண்டும்.

**முக்கியம்**

சட்டமாணி கற்கைகள் நிகழ்ச்சித் திட்டம 2016/2017 தெரிவுபரிட்சைக்கான விண்ணப்பபடிவம்இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். நிரப்பிய விண்ணப்பபடிவங்கள் எந்த பிராந்திய நிலையத்தில் கற்கவிரும்புகின்றீர்களோ பெப்ரவரி 11 ம் திகதி 2017 அல்லது அதற்கு முன்னரோ கையளிக்கவும

| | |
|---|---|
| **Colombo Regional Centre**<br>Ms. U.H.B.V.P Angammana<br>Actg. Assistant Director<br>OURC, Nawala, Nugegoda<br>011-2881380/281/360 | **Matara Regional Centre**<br>Mr. G. Dinesh<br>Assistant Director OURC, Nupe,<br>Matara.<br>041-2222943/041-2229782 |
| **Kandy Regional Centre**<br>Mr. Anushka Bandara<br>Assistant Director<br>OURC,<br>Polgolla,<br>Kandy<br>081-2494083/84<br>081-2494495/96/97 | **Anuradhapura Regional Centre**<br>Ms.Shayama Madugalla<br>Assistant Director<br>OURC, Jayanthi Mawatha, (Depot Area)<br>Anuradhapura<br>025-2222871 |
| **Batticaloa Regional Centre**<br>Mr. A.D Kamalanathan<br>Assistant Director<br>OURC, No.23 New Road<br>Batticaloa.<br>065-2222264 | **Jaffna Regional Centre**<br>Mr. K.Kanthavel<br>Assistant Director<br>OURC, Browns Road, Kokuvil<br>Jaffna.<br>021-2223374 |
| **Kurunegala Regional Centre**<br>Mr. Mahinda Sakalasooriya<br>Assistant Director<br>OURC, Negombo Road<br>Nissanka Mawatha Junction<br>Malkaduwawa<br>Kurunegala.<br>037-2223473 | **Badulla Regional Centre**<br>Mr. Hiranthi Galahitiyawa<br>Assistant Director<br>OURC, No. 179,<br>Keppitipola Road,<br>Badulla.<br>055-3012151/055-2228842 |